2024 பிப்ரவரி 13]

மாலை நேரங்களில் மக்கள் செல்வதற்கே அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஒற்றை யானையைப் பிடிப்பதற்காக கும்கி யானையைக் கொண்டுவந்து, அந்த யானையைக் காட்டுப் பகுதிக்குள் அழைத்துச் செல்வதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, கண்டிப்பாக அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, அந்த இடத்தில் கூடியவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:*

1. திரு. க. அன்பழகன்

2. திரு. நா. இராமகிருஷ்ணன்

3. திரு. S.R. இராஜா

4. திரு. தா. உதயசூரியன்

5. திரு. துரை. சந்திரசேகரன்

5. தகவல் கோரல்

(அ) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு உரிய இருக்கையை முன்வரிசையில் ஒதுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் வந்தார்கள். ஏதோ ஒரு கருத்தை zero hour-ல் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். என்ன விஷயம் என்று சொல்லுங்கள் என்றேன். அதை அவர் என்னிடம் சொல்லவில்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன விஷயத்தைத்தான் இப்போது சொல்கிறேன். பெரிய விஷயம் ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், நமது செயலாளர் அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், ஏற்கெனவே இதற்கு முந்தைய காலகட்டத்தில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், ஒன்று அறிவிப்பு கொடுப்பார்கள் அல்லது விஷயத்தையாவது வந்து சொல்வார்கள். அந்த முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை zero hour-ல் raise பண்ணியிருக்கிறார்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பில் இருக்கின்றன. அவற்றைப் பாருங்கள்.